3. அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1981) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

4. கவன ஈர்ப்பு.

சென்னை பெரிய மருத்துவ மனையில் பருத்தி சூதாட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4—4—1981 சென்னை பெரிய மருத்துவ மனையில் பெண் செவிலியர் உடைமாற்றும் அறையில் பருத்தி சூதாட்டம் நடந்தது சம்பந்தமாக பல பெரிய புள்ளிகள் என கருதப்படும் பலர் கைதாகி உள்ளனர். இது நாளொன்றுக்கு ரூ. 10,000 பெறுமானவரை பருத்தி சூதாட்டம் நடைபெற்று வருகிறது. தினமும் பெண் செவிலியர் உடை மாற்றும் அந்த அறையின் பின்புறம் ஏராளமான ஆண்கள் நடமாட்டம் ஏற்பட்டு உள்ளதால் அந்த செவிலியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து திருவாளர்கள் நா. சுந்தரராஜ், கே. எம். தங்கமணி, இரா. தாமரைக் கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, 4—4—1981 சென்னை பெரிய மருத்துவமனையில் பெண் செவிலியர் உடைமாற்றும் அறையில் பருத்தி சூதாட்டம் நடந்தது சம்பந்தமாக பல பெரிய புள்ளிகள் என கருதப்படும் பலர் கைதாகி உள்ளனர். இங்கு நாளொன்றுக்கு ரூ. 10,000 பெறுமானவரை பருத்தி சூதாட்டம் நடைபெற்று வருகிறது. தினமும் பெண் செவிலியர் உடை மாற்றும் அந்த அறையின் பின்புறம் ஏராளமான ஆண்கள் நடமாட்டம் ஏற்பட்டு உள்ளதால் அந்த செவிலியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.